# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

முன்னிலை: திரு. அ.செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள் திங்கட்கிழமை

<u>அசல் வழக்கு எண்.106/2017</u>

மாணிக்கம் ... வாதி

(எதிராக)

1. சிதம்பரம் (எ) சண்முகம்
2. சித்ரா
3. ருகோஜனம்மாள் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 19.12.2017-ம் தேதியில் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் 18.09.2019-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. G. அசோக்குமார்** அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. S.R. மாணிக்கப்பிரபு** அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தும், பின்னிட்டு இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததாலும் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. S. கபிலன்** அவர்கள் ஆஜராகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், 3-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜரில்லாததால்

தோன்றாத்தரப்பினராக கருதியும், விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**<u>தீ ர் ப் பு ரை</u>**

1. வாதி இவ்வழக்கை வழக்கு சொத்துக்களில் வாதிக்குள்ள 4ல் 1 பாகத்தை ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவும், நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து 4 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவும், தன்னுடைய 4ல் 1 பாகத்தை சுவாதீனம் அடையும் வரை பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க பாராதீனம் செய்யாமலிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>வழக்குரையின் சுருக்கம்:</u>**

வழக்கு சொத்துக்களில் 1ம் இனச் சொத்து ஆதியில் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தந்தையும், 3ம் பிரதிவாதியின் கணவருமான இறந்துவிட்ட சண்முகத்தின் தந்தை ஜடையன் (எ) சென்றாய கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவர் உயிருடன் இருந்த போதே சண்முகத்திற்கு பாகத்தில் ஒதுக்கி சண்முகத்திற்கு பாத்தியப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், வழக்கு 2, 3, 4 இனச் சொத்துக்கள் சண்முகத்திற்கு சுய சம்பாத்தியத்தின் பேரில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், கடந்த 20.08.1970-ம் தேதியில் மேற்படி சண்முகம் எந்த ஒரு ஆவணத்தையும் ஏற்படுத்தி வைக்காமல் இறந்துவிட்டதாகவும், அன்றைய தேதி முதல் வாதி மற்றும் பிரதிவாதிகளும் வழக்கு சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாகவும், வாதி 1990-ம் ஆண்டே திருமணம்

செய்துக்கொண்டு பெத்தானூர் கிராமத்தில் வசித்து வந்ததாகவும், அவ்வாறு இருந்தாலும், வழக்கு சொத்திற்கு செலவுத்தொகையில் தன்னுடைய பங்கை கொடுத்து வந்து அதில் கிடைக்கும் வருவாயில் தன்னுடைய பங்கை பெற்று வந்ததாகவும், கடந்த நவம்பர் 2017ல் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் விவசாய ஏற்பாடுகள் குறித்து தகராறு ஏற்பட்டதாகவும், வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி விற்பனை செய்யப்போவதாக கூறியதாகவும், அதனால் இனியும் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவிக்க வாய்ப்பில்லை என்பதால் 1ம் பிரதிவாதி தனக்குள்ள உரிமையை மறுத்து வருவதால் 2, 3 பிரதிவாதிகளும் அது குறித்து சரியான பதிலை கூறாததால் பாகப்பிரிவினைக்கும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்கும் இவ்வழக்கை தாக்கல் செய்ததாகக் கூறுகிறார்.

3. **<u>1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:**

வழக்கு 1ம் இனச் சொத்து சென்றாயகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், 2 முதல் 4 இனச் சொத்துக்கள் சண்முகத்தின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்று வாதியே நிரூபிக்கவேண்டும் என்றும், சண்முகம் எந்த ஒரு ஆவணமும் ஏற்படுத்திவைக்காமல் இறந்துவிட்டார் என்று வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், வாதி விவசாய செலவினங்களுக்கு தன்னுடைய பங்கை அளித்து அதில் வந்த வருமானத்தில் தன்னுடைய பங்கை பெற்றுக்கொண்டார் என்பதையும் நிரூபிக்க வேண்டும் என்றும், வழக்கு 1ம் இனச் சொத்து பூர்விகமாக 1ம் பிரதிவாதியின் முன்னோருக்கு பாத்தியப்பட்டிருந்து அதிலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு 2 முதல் 4 இனச் சொத்துக்களை சண்முகம் கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்றும், 1980ம் ஆண்டில் குடும்பத்தில் இருந்த ஆண் வாரிசுகளுக்கிடையே ஏற்பட்ட

குடும்ப ஏற்பாட்டின் படி வழக்கு 4 இனச் சொத்துக்களும், 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், பூர்விகமாக பாத்தியப்பட்டிருந்த தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை 3ம் பிரதிவாதி அடைய வேண்டும் என்றும், வழக்கு சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு 3ம் பிரதிவாதியிடமிருந்த தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை கொண்டு வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் திருமணம் செய்து சீர்வரிசை செய்து அவரவர்கள் கணவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர் என்றும், வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் கடந்த 30 ஆண்டுகளாக வழக்கு சொத்தில் எந்த தொடர்பும் இல்லை என்றும், அவர்கள் இருவரும் புறம் தள்ளப்பட்ட நபர்கள் என்றும், எந்த உரிமையும் சுவாதீனம் இல்லாத வாதி மற்றும் 2ம் பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், சொத்து விவரம் சரியாக தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்று கூறி தள்ளுபடி செய்யக் கோருகிறார்.

4. இவ்வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டனர். 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு சிறப்பு பட்டியலில் போடப்பட்டு வாதி தரப்பில் வா.சா.1ஐ முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் 1ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு தோன்றாத் தரப்பினராக்கப்பட்டு அவருக்கு எதிராக 21.06.2019-ம் தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**5. <u>எழுவினாக்கள் :</u>**

1. வாதி கோரியுள்ளபடி வழக்கு சொத்துக்களில் 4ல் 1 பாகம் பெற அருகரா?

2. வாதி கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அருகரா?
3. வேறு என்ன பரிகாரம்?

6. <u>**எழுவினாக்கள் 1 முதல் 3-க்கான தீர்வு:**</u>

இவ்வழக்கில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் உள்ள உறவுமுறை குறித்து 1-ம் பிரதிவாதியால் மறுக்கப்படவில்லை. ஆனால் வாதியே நிரூபித்திடவேண்டும் என்று எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது.

7. வாதி வழக்கு 1ம் இனச் சொத்து வாதியின் தந்தை வழி தாத்தாவான ஜடையன் (எ) சகாய கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று கூறி 26.5.1952-ம் தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.1-ஆக குறியீடு செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பார்க்கும்பொழுது புல எண்.175-ல் நிலம் வாங்கியுள்ளதாக காணப்படுகிறது. அதே போல் வழக்கு 2 முதல் 4 வரையிலான அயிட்ட சொத்துக்கள் வாதியின் தந்தை சண்முகம் தன்னுடைய சுய சம்பாத்தியத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்று கூறி வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை பார்க்கும்பொழுது புல எண்.276, புல எண்.272 மற்றும் புல எண்.161 ஆகியவற்றில் நிலங்களை கிரயம் பெற்றதாக தெரிகிறது. மேற்படி நான்கு கிரய ஆவணங்களை அனுசரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதியின் தந்தை சண்முகம் பெயரிலுள்ள பட்டா வழக்குச் சொத்துக்களை உறுதிசெய்கின்றன.

8. 1-ம் பிரதிவாதி இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தாலும் வாதியின் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் அவரை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் அவருக்கு எதிராக 21.6.2019-ம் தேதியில் ஒருதலைப்பட்ச

உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

9. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படியும் அவருடைய சாட்சியத்தின் அடிப்படைப்படையிலும் பார்க்கும்பொழுது வழக்குசொத்துக்கள் வாதி,1, 2 பிரதிவாதிகளின் தந்தையும், 3-ம் பிரதிவாதியின் கணவருமான சண்முகத்திற்கு பாத்தியப்பட்டவை என்பது நன்கு தெரிகிறது.

10. 1-ம் பிரதிவாதி வாதியும், 2ம் பிரதிவாதியும் புறம்தள்ளப்பட்ட நபர்கள் என்று கூறியிருந்தாலும் வாதியை குறுக்கு செய்ய முன்வராததால், அவர் எந்த ஒரு சாட்சியையும் விசாரணை செய்ய முன்வராத நிலையில், எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்காதபோது வழக்குசொத்துக்கள் முழுவதும் சண்முகத்தின் வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்ற அனுமானம் கொள்ளப்படுகிறது. அதனால் வாதி கோரியுள்ளபடி அவருக்கு வழக்குசொத்துக்களில் 4-ல் 1 பங்கு உரிமை உள்ளது என முடிவு செய்யப்படுகிறது.

11. வாதிக்கும் வழக்கு சொத்துக்களில் உரிமையிருக்கும் நிலையில் முறையான பாகப்பிரிவினை ஏற்படாமல் அவற்றை பொறுத்து விற்பனை செய்ய பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை. அவ்வாறு செய்தால் அது வீண் வில்லங்கங்களையே ஏற்படுத்தும். அதை தவிர்க்கும் பொருட்டு வாதி கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

12. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அடைந்துள்ள நிலையில் வேறு எந்த பரிாகரமும் பெற அருகர் அல்ல என முடிவு செய்யப்படுகிறது.

**13. முடிவாக, வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 4ல் 1பங்கு உரிமையுள்ளது என முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், இறுதிநிலை தீர்ப்பாணைக்காக காலவரையின்றி வழக்கு ஒத்திவைத்தும், வாதி வழக்கு சொத்துக்களில் 4-ல் 1 பங்கினை தனி சுவாதீனம் பெறும் வரை பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க பராதீனமும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கி சரி செய்யப்பட்டு 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/- திரு. அ.செல்வகுமார்,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

**<u>இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 - திரு. மாணிக்கம்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

வா.சா.ஆ.1 - 26.05.1952-ம் தேதியிட்ட ஜடையன் (எ) சென்றாய கவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.2 - 04.07.1967-ம் தேதியிட்ட சண்முகம் பெயரிலான கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 - 05.08.1967ம் தேதியிட்ட சண்முகம் பெயரிலான கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.4 - 04.05.1968ம் தேதியிட்ட சண்முகம் பெயரிலான கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.5 - 18.12.2017-ம் தேதியிட்ட சண்முகம் பெயரிலான பட்டா (பட்டா எண்.306) - சான்றிட்ட நகல்

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:** இல்லை.

(ஒம்/- திரு. அ.செல்வகுமார்,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

// உண்மை நகல் //

சீரான/வரைவுதீர்ப்புரை
அசல் வழக்கு எண்.106/2017
நாள்: 18.11.2019